தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ரவி குமார் தியோடர், பி.எச்டி.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (விரிவாக்கம்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tanu.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 19-2-2011

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## பிப்ரவரி மாதத்திற்கான பூச்சி நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு பரிந்துரை

தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் பூச்சி நோய் தாக்குதல் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. பொதுவாக பூச்சி மற்றும் நோய் தாக்குதல் குறைவாகவே காணப்பட்டன. ஆதலால் விவசாயிகள் விளக்கு பொறி, மஞ்சள் ஒட்டும் பொறி மற்றும் இனக் கவர்ச்சி பொறிகளை வயல்களில் வைத்து பூச்சிகளின் நடமாட்டத்தை கண்டறியவும், தேவைப்படின் இயற்கை பூச்சி கொல்லியாகிய வேப்பங்கொட்டை சாறு 5 சதம் தயாரித்து பூச்சிகளின் இளம் பருவத்தில் பயிர்களுக்கு தெளித்து கட்டுப்படுத்தவும் பரிந்துரைக்கப்படுகிறது. இரசாயன பூச்சிகொல்லிகளை முடிந்த வரை தேவையில்லாமல் உபயோகிப்பதை தவிர்க்குமாறு விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மக்கள் தொடர்பு அலுவலர்